575

ஸ்ரீ:

புராண பிரசித்தி மிக்க

# வேதாரண்ய மகாத்மியம்.

OFFICE OF THE REGISTRAR OF B...
4-FEB1938
MADRAS

நூலாசிரியர்:

கி. கூ. வதுளாபரணம் அவர்கள்.

பிரசுர கர்த்தர்:

ம. கி. குப்புசாமி அவர்கள்.

சென்னை:

வதுளாபரண அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது.

...ர் செய்தது] [விலை அணு 2

O22:38.21193VB
N33
17288

# ஆழ்வார் சன்னதி ஔஷதங்கள்.

ஆயுர்வேத சாஸ்திர சம்பந்தமாய் மகா யோகிகளும், சித்தர்களும் அருளிய முறைப்படி தயார் செய்யப்பட்ட எங்கள் ஔஷதங்களின் முக்கிய விபரம்.

### ஸ்திரீ சஞ்ஜீவி.

இம்மருந்து ஸ்திரீகளுக்கு ஒரு சஞ்ஜீவி போன்றது. ஸ்திரீகளுக்கு ருது காலங்களில் தோன்றும் கஷ்டங்களையும் அகாலருது, தலைநோய், பைத்யம், உடம்பு திமிர் முதலிய நோய்களையும் போக்கி நோயற்ற வாழ்வுடன் தேகாரோக்கியத்தை யளிக்கும்.

12 அவுன்ஸ் விலை 3-0-0. 6 அவுன்ஸ் 1-12-0.

### சர்வரோக சம்ஹாரிணி.

இளமையிலேயே வாலிபர்களுக்கு அநேக விதங்களில் தோன்றும் கர்பச்சூடு, மந்தாக்னி, இரத்தமின்மை, இந்திரியஸ்கலிதம் முதலியவைகளினால் மெலிந்துபோனவர்கள் இம்மருந்தை உட்கொண்டால் இழந்துபோன வீர்யத்தை மறுபடியும் அடைந்து முகவசீகரத்துடனும் சுறுசுறுப்புடனும் இருப்பார்கள்.

12 அவுன்ஸ் 3-0-0. 6 அவுன்ஸ் 1-12-0.

### சந்தானகரணி.

பற்பல காரணங்களினால் புத்திரசந்தான மற்றிருக்கும் ஸ்திரீகளுக்கு இது ஒரு வரப்ரசாதமாகும். விலை ரூ. 2

### வீர்யவிருத்தி லேக்யம்.

இம்மருந்து அமிதமான போகத்தினால் வீர்யத்தை யிழந்து வாடும் வாலிபர்களுக்கும் கனவிலும், மூத்திரத்திலும் இந்திரியம்வெளிப்படுதல், கைகால்கள் பலவீனம், சுறுசுறுப்பின்மை முதலியவற்றினைப் போக்கி இழந்துபோன வீர்யத்தையளித்து தேகத்தை வஜ்ரமயமாக்கும். விலை ரூ.2

### காலரா மாத்திரை.

காலரா எவ்வளவு அபாயகரமாயிருந்தபோதிலும் இம்மருந்தை உட்கொள்ள சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். விலை அணா 8.

# முன்னுரை.

சாகரம் சூழ்ந்த இம்மண்ணுலகில் சிறப்புற்றோங்கும் நாடுகள் அனைவற்றிற்கும் திலகம்போன்றதும், பெருமை மிக்கதும் நம் பாரததேசமேயாகும். இப்பாரததேசம் இயற்கையிலேயே வனப்பில் சிறந்தும் மேனாட்டாரால் புகழப்பட்டும் இருக்கிறது, இத்தகைய நம் புனித பாரதநாடு சிறப்புற்று விளங்குவதற்கு பல காரணங்கள் இருப்பினும், அவற்றுள் சிறந்தது வளப்பமிக்க பட்டணங்களும், கீர்த்தி பெற்ற ஸ்தலங்களும், புண்ணிய தீர்த்தங்களுமாகும். இவற்றினுள் மானுடகோடிகளின் பாபங்களைப்போக்கி, பரிசுத்த மனதுடையவர்களாக்கும் பெருமை புண்ணியஸ்தலங்களுக்கே உரியதாகும். யாகம், யோகம், தவம், தானம் முதலியவைகளினால் உண்டாகும் பலனைக்காட்டிலும் ஸ்தல தரிசனங்களால் தீராப்பிணிகளும் களைந்தொழியவல்லது. மற்றும் சிசுக்கொலை, பிரம்மஹத்தி, பிறவிப்பிணி, மாத்ருகமனம் முதலிய கொடிய தோஷங்கள், ஒலியைக்கண்ட இருளைப்போல ஒழியும் தகைமைவாய்ந்தது க்ஷேத்திர தரிசனங்களேயாகும். அதுவன்றியும், க்ஷேத்திர தரிசனங்கள், அஞ்ஞான இருளாகிய இவ்வுலகின்பங்களினின்று நீங்கி, ஈசுவானிடத்தில் பற்றுடன் விளங்கவும், பேரின்பமாகிய முத்தியையடைவதற்குச் சாதனமாய் இருக்கவும் ஏற்ற கருவியாயிருக்கிறது. இப்படிப்பட்ட பெருமைவாய்ந்த திருப்பதிகள் பலவிருந்தாலும், அவற்றுள் புராண பிரசித்திபெற்று,

முற்றும்துறந்த முனிவர்கள் சூழ்ந்து வாழ்ந்த மாட்சி யுடையது வேதாரண்ய ஸ்தலமேயாகும்.

இத்தகைய வேதாரண்ய க்ஷேத்திரத்தின் மகிமை பண்டை நாட்களிலும் அல்லாமல், சென்ற ஆண்டு நடந்த உப்புச் சத்தியாக்கிரகத்தின்போதும் இடமளித்து, முடிவில் வெற்றியுமளித்ததால் இதன் பெருமை என்றென்றும் அழியாது நிலைத்து நிற்குமென்பதில் ஐயமில்லை. பண்ணுலகத்தோராலன்றி விண்ணுலகத்தோராலும் உறைக்கவல்ல கர்ம, யோக, ஞான, பக்தி, அன்பு முதலியவற்றை விளக்கும் 99 அத்தியாயங்களுடன் கூடிய இந்நன்னூலின் சிறப்பினை அறிவது எளிதன்று. இப்பேர்ப்பட்ட மாட்சி மிக்க நூலினை அனைவரும் உணர்ந்தறியும் பொருட்டு எளிய முறையில் வெளியிட்டால் மிகவும் நலமாயிருக்கு மென்னும் அன்பர்கள் பலரின் விருப்பின்படி, சிற்சிறிய பாகங்களாக வெளியிடலானோம். பொதுஜன முன்னேற்றத்தின்பொருட்டு இப் புராணநூலை வெளியிடவந்த எம் விருப்பினை தேசாபிமானிகள் அனைவரும் ஆதரித்து, இதன் மற்ற பாகங்களையும் விரைவில் வெளியிடுமாறு தூண்டு வார்களென நம்புகின்றோம்.

ஆசிரியர்.

N. K. Vakeela[illegible]

# வேதாரண்ய மகாத்மியம்.

---

## வரலாறு.

சர்வலோகங்களையும் சிருஷ்டித்து, படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய இம்மூன்று கருமங்களுக்கு நாயகனாய், ஜீவகோடிகளின் அஞ்ஞானத்தைப்போக்கி ஞானத்தை யளிக்கும் ஸ்ரீமன் நாராயணமூர்த்தியின் அவதாரமாகிய ஸ்ரீ வேதவியாச மகாமுனிவர், மானுடகோடிகள் உய்யும் பொருட்டு, காந்தபுராணத்தில் சனத்குமார சம்மிதையிலுள்ள வேதவன மகாத்மியத்தை விக்னேசுவரர், பரமசிவம், மகாவிஷ்ணு முதலிய இஷ்டதேவதைகளை வணங்கி, உத்தமகுண சீலரும், கலங்கமற்ற தூயமனதுடையவருமாகிய சூதமுனிவருக்கு உபதேசித்தருளினார். இப்படிப்பட்ட வேதாரண்ய மகா இரகசியத்தை கேட்கும் பொருட்டு சித்தாச்சிரம வாசிகளாகிய வசிஷ்டர், கௌதமர், விசுவாமித்திரர், பிருகு, மார்கண்டேயர், யஜோபயாஜர் முதலான முனிவர்களும், அவர்களுடைய சிடர்களும் ஒன்றுசேர்ந்து, சூதமுனிவரின் ஆச்சிரமத்தை யடைந்தனர். அப்பொழுது சூதமுனிவர் நித்தியகடமைகளை முடித்துக்கொண்டு நிர்மலமனதுடன் இருப்பதைக் கண்ட முனிவர்கள் அவரை நமஸ்கரித்தனர். சூதமுனிவர், மாதவர்கள் அனைவரும் தன் ஆச்சிரமத்தை யடைந்ததைக் கண்டு சந்தோஷங்கொண்டு, எதிர்சென்று அழைத்து உபசரித்து, ஆலிங்கனஞ்செய்து, அவரவர்க்குரிய ஆசனத்

தில் அமர்த்தினர். மாதவர்கள் அனைவரும் அமர்ந்த பின்னர், சூதமுனிவர் தன்கருணைக்கண்ணினால் வசிஷ்டாதி முனிவர்களைப்பார்த்து, "ஓ தவத்திற் சிறந்த சித்தாச்சிரம வாசிகளே, நீங்கள் அனைவரும் திருவுளம்கொண்டு இங்கு எழுந்தருள, அடியேனும், இவ்வாச்சிரமும், என்ன தவம் செய்ததோ? ஏழையேனாகிய என்னைக்காண, நீங்கள் அனை வரும் ஏகமனதுடன் இங்கு எழுந்தருளிய காரணம் யாதெனத் தெரிவித்தருளல்வேண்டும்" என்று மிக்க வினய முடன் கேட்டார்.

சூதமுனிவரின் கருணைமிக்க இனிய மொழிகளைக் கேட்ட வசிஷ்டாதி முனிவர்கள் அனைவரும் மெய்குளிர்ந்து, மனம்பூரித்து, ஆனந்தபரவசராய்த் தந்தம் மனோபீஷ்டம் நிறைவேறியதென்று மனத்திற்குள் நினைத்து, சூத முனிவரை நோக்கி, "ஓ அருள் ஒளியே, நாங்கள் தங்க ளிடமிருந்து தானம், தர்மம், தவம், யோகம், யாகம் முதலி யனவற்றின் பெருமையையும், சிவ, விஷ்ணு, தேவி மகிமை யையும் சந்தேகமற கேட்டுணர்ந்தோம். ஆனால், இப் பொழுது முத்தி சாதனம் யாதென்பதை எங்களுக்குத் தெரிவித்தருளல்வேண்டும்" என்று மிக்க ஆவலுடன் கேட்டனர்.

இவ்வாறு வேதத்தியானிகளும், நித்திய கர்மானுஷ்டானங்கள் தவறாதவர்களும், வைராக்கியசீலர்களுமாகிய முனிவர்கள், முத்தி சாதனத்தை உரைக்குமாறு கேட்க, சூதமுனிவர் மிக்க மகிழ்ச்சிக்கொண்டு, உலகவின்பங்களைத் துறந்த துறவிகளைப் பார்த்து, "ஓ ஞானிகளே, வேதநாயகனாய் விளங்கும் பிரம்மதேவனும் அறிவதற்கரிய மகா இரகசியமாகிய முத்திசாதனத்தை, ஜீவகோடிகள் உணர்

ந்து கண்டத்தேறும்பொருட்டு ஸ்ரீ வேதவியாசர் எமக்கு அருளினர். இப்படிப்பட்ட இரகசியத்தை இவ்வளவு நாட்களாக எவரும் கேட்காமலும், நான் சொல்லாமலும் இருந்ததனல் மகாபாவியானேன். இப்பொழுது நீங்கள் அனைவரும் எம் ஆச்சிரமத்திற்கு எழுந்தருளி கேட்டபடியால் நான் பாக்கியசாலியானேன்" என்று சொல்லிவிட்டு, முத்திசாதனத்தை உரைக்கலானர்.

## முத்தி சாதனம்.

ஓ முக்காலமும் உணரவல்ல முனிவர்களே, கேளுங்கள். முக்திக்குச் சாதனம் பிரம்மைக்கிய ஞானம். அந்த பிரம்மைக்கிய ஞானம் வேதாந்த விசாரத்தினல் உண்டாகின்றது. ஞானத்தைத் தவிர மற்றவைகள் கிரமமாய் மோக்ஷசாதனங்கள். ஞானமில்லாமல் மோக்ஷம் கிடையாது. ஞானத்திற்குக் காரணம் யாக, யோக, தான, தர்மம் முதலியவைகள். இவைகளைக் காட்டிலும் வேதாந்த விசாரம் தக்கது. வேதாந்த விசாரத்தைக் காட்டிலும் தியானம் உத்தமமானது. தியானத்தைக் காட்டிலும் மௌனம் சிறந்தது. மௌனத்தைக் காட்டிலும் சமாதி மேலானது. சமாதியில் ஆத்மஞானத்தை யடைந்தவன் உலக அதிசயங்களின் உண்மையைப் பகற்கனவாக மதிக்கின்றான். ஞானமற்றவன், இந்திரஜாலத்தைப்போன்ற உலகமாயைகளை உண்மையென்றெண்ணி, அதில் நம்பிக்கைக் கொண்டு, ஜனன, மரண பிணிகளில் சிக்கி, நாளுக்கு நாள் அழிந்துபோகின்றான். அத்வைத பிரம்ம ஞானியானவன் பிரமை, பிரமாணம, பிரமேயம், பிரமாதா ஆகிய இவற்றை நேராகக்கொண்டு, நித்தியானந்தத்துடன் ஜீவனும், முக்

தனுமாகவிருந்து, பிறகு கைவல்லியத்தை யடைகின்றான். இப்பேர்ப்பட்ட ஞானமானது சிவ, விஷ்ணு, தேவி பக்தி யுடையவர்களுக்கு யாதொரு தடையில்லாமல் தானாகவே தோன்றும்.

நித்தியகர்மானுஷ்டானங்களால் மன சுத்தியும், பரம் பொருளிடத்தில் பற்றும் உண்டாகின்றது. பிறகு ஞான மும் உதிக்கின்றது. ஞானத்தினால் அவைதபுத்தி நசித்து சமபுத்தி தோன்றுகின்றது. நித்தியகர்மானுஷ்டானங்கள் ஒன்றுமில்லாத பாபிகளாகிய ஆடவர்களுக்கும், பெண்டிர் களுக்கும் கங்காத்துவாரம், புஷ்கரம், காசி, பிரயாகை, நைமிச்வனம், கயை, பதரிகாச்சிரமம், குருக்ஷேத்திரம், கங்காசங்கமம், சோமநாதம், ஓங்காரம், மகாகானம், கோகர் ணம், மல்லிகார்ச்சுனம், காளஹத்தி, காஞ்சி, விருத்தா சலம், அருணாசலம், விரிஞ்சிபுரம், சிதம்பரம், காவேரி சங்க மம், திருவெண்காடு, திருவாலங்காடு, ஸ்ரீகாழி, திருக்கடை யூர், மாயூரம், குற்றாலம், கோமதீசுவரம், வைத்தீசுவரம், திருக்கோடிக்காவல், மங்களவம்சம், மத்தியார்ச்சுனம், திரு நாகேசுவரம், கும்பகோணம், திருவலஞ்சுழி, ஸ்வாமிமலை, திருவையாறு, திருப்பூந்துருத்தி, திருப்பயனம், வசிஷ் டேசுவரம், திருச்சோற்றுத்துறை, திருவானைக்காவு, ஸ்ரீவாஞ்சம், திருவாரூர், இராமேசுவரம், மதுரை, திருச் சங்குமலை, திருச்செந்தூர், கன்னியாகுமரி, சுசீந்திரம், வில்வவனம், பீமேசுவரம், பாரிசாதவனம், நாகப்பட்ட ணம், வேதாரண்யம் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களில் ஆவி துறப்பதினால் மோக்ஷம் சித்திக்கும். இவைகளில் வேதாரண்யம் என்று சொல்லப்படும் வேதவனம் மிகவும் சிறந்தது. கோலாகலன் என்கிற கொடிய சண்டாளன்

கூட இவ்வேதவனத்தில் முத்தி யடைந்திருக்கின்றான். இவ்விஷயத்தில் ஓர் அதிசயமான புராண சரித்திரம் ஒன்றிருக்கின்றது. அதைச் சொல்லுகின்றேன் கேளுங்கள்.

## மாந்தாதாவின் பிறப்பு

சூரியவம்சத்தில் யுவ்நாசுவன் என்று ஓர் அரசனிருந்தான். அவனுக்குப் பல்லாண்டுகளாகப் புத்திர பாக்கியமில்லாமல் இருந்தது. அதற்காக அளவிறந்த தான தர்மங்கள் செய்தும் பலனற்றமையால், தனக்குப் பின் அரசாட்சி செய்வதற்கு புத்திரர்கள் இல்லையென்று கவலைகொண்டான். பின்னர், சத்புத்திரர்களைப் பெறும் பொருட்டு, ராஜ்யபாரத்தைத் தன் மந்திரிகள் வசம் ஒப்புவித்து, தன் இரு மனைவியர்களுடன் தவம் செய்யும் பொருட்டு கானகம் சென்றான். அவ்வனத்தில் பலவிடங்களிலும் சுற்றித்திரிந்து, முடிவில் அங்கு வசித்துவந்த பிருகு முனிவரைக் கண்டு வலம் வந்து, சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, தன் கவலையைத் தீர்த்தருளுமாறு வேண்டினான். முனிவரும், மன்னனிடம் அன்புகொண்டு, அவனை ஒரு யாகம் செய்யுமாறு தெரிவித்தார். வேந்தனும் அதற்கிணங்கி, மாதவரின் உதவியைக்கொண்டு ஒரு யாகம் செய்வித்து, தேவர்களுக்கு அவிர்ப்பாகம் கொடுத்தான். யாகம் இனிதுற நிறைவேறியதும், அதில் கிடைக்கப்பட்ட தீர்த்தத்தை முனிவர், ராஜபத்தினிகளுக்குக் கொடுப்பதற்காக ஒரு கலயத்தில் வைத்திருந்தார். சிறிதுநேரம் கழித்து அரசனுக்குத் தாகவிடாய் அதிகரிக்க, முன்பின் யோசியாமல் கலயத்திலுள்ள தண்ணீரைக் குடித்துவிட்டான். பின்னர், அரசன் தான் யோசியாமல் செய்த காரியத்திற்காக

மனம் மிக வருந்தி, முனிவரை வணங்கி, தான் செய்த பிழையைத் தெரிவித்தான். அரசனின் அறியாமையைக் கேட்ட முனிவர் வியப்படைந்து, காவலனை நோக்கி, "ஓ மாநிலம் காவலா, நீ என்ன அடாத காரியம் செய்தாய். மிகவும் அருமையான யாகம்செய்வித்துப் பெற்ற ஜலத்தை உன் மனைவியர்கள் அல்லவா குடிக்கவேண்டும். அவ்வாறின்றி, நீ பருகினமையால் நீயே உனக்கே அழிவைத்தேடிக் கொண்டாய். இப்பொழுது பிறக்கப்போகும் புதல்வன் நூறு வருடங்கள் கர்ப்பத்திலிருந்து பின்னர் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளிவருவான்" என்றார்.

முனிவரின் மொழிகளைக் கேட்ட காவலன், எதிர் பாராமல் நேர்ந்த விபத்திற்கு அஞ்சினனாயினும், ஒருவாறு தேறி, இருடியரை நோக்கி, "புத்திரசோகத்தை நீக்கவந்த ஓ புண்ணியரே, இம்மையில் நான் அனுபவிக்கவேண்டிய இன்பங்கள் அனைவற்றையும் அடைந்துவிட்டேன். ஆயினும் மறுமைக்குக் காரணமாயும், 'புந்' என்னும் நரகத்தினின்று விலகியிருக்கவும் ஒரு புத்திரன் பிறந்தால் அதுவே போதுமானதாகும்" என்று பணிவுடன் உரைத்து, பின்னர் இருடியரிடம் விடைபெற்றுத் தன் ராஜ்யம் வந்து சேர்ந்தான்.

இவ்வாறு ஆண்டுகள் நூறு சென்ற பின்னர், முனிவரின் வார்த்தையின்படியே உதயசூரியனைப் போன்ற ஒரு செல்வன், மன்னன் வயிற்றைப் பிளந்துகொண்டு வெளிப்பட்டான். குழந்தையின் முகத்தைக் கண்ட அரசன் அளவிலா ஆனந்தத்துடன் வீரசொர்க்கமடைந்தான். அரசன் இறந்ததும் தேவாம்சத்தினால் பிறந்த அக்குழந்தைக்குப் பால் கொடுத்து காப்பாற்றுவார் இல்லாமையால் தேவேந

திரன் அன்புகொண்டு குழந்தையிடம் வந்து, தன் விரலை அதன் வாயில் வைத்துச் சப்பும்படிச் செய்தான். அக் குழந்தையும் இந்திரன் விரலைச் சப்பிக்கொண்டு வளர்ந்த மையால் அதற்கு மாந்தாதா என்று நாமகரணஞ் சூட்டி ஞன். மாந்தாதாவும் வளர்பிறையைப் போல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்துவந் தான். ஐந்து ஆண்டுகள் நிறைவேறியதும் சகல சாஸ்திரங் களையும் ஓதியுணர்ந்தான். அதன் பின்னர், அரசர்க்குறிய யானையேற்றம், குதிரையேற்றம், அஸ்திரப்ரயோகம், மல் யுத்தம் முதலியவற்றில் சிறந்துவிளங்கி, காலக்கிரமத்தில் சிறந்த அரசர்களுள் மேலானவனும், அச்வினி தேவர் களின் அனுக்கிரகத்தால் புஜபல பராக்கிரமத்தில் மிக்கவ னும், ஏகசக்ராதிபத்தியத்துடன் நீதிநெறி தவறாமல் அரசாண்டு வந்தான்.

இவ்வண்ணம் அரசாட்சி செய்துவருநாளில் ஒருநாள் திரிலோகசஞ்சாரியாகிய நாரதர், மாந்தாதாவின் சபாமண் டபத்திற்கு எழுந்தருளினர். மாந்தாதாவும் மனமகிழ்ச் சியுடன் தன் ஆசனத்தினின்று எழுந்து விரைந்துசென்று, நாரதரின் பாதாரவிந்தங்களை வணங்கி, அழைத்துச் சென்று, தக்கதோர் ஆசனத்தில் அமர்த்தினன். பின்னர், நாரதரை நோக்கி, "ஓ மஹாநுபாவா, தாங்கள் எதிர் பாராதவண்ணம் ஏழையேன் இல்லம் விரும்பிவந்த கார ணம் யாதுளதோ? தங்கள் முகாரவிந்தமானது என்றுமில் லாமல் இன்றைக்கு செந்தாமரை மலரைப் போல் மலர்ந் திருக்கின்றதே! தேவரீர் அடியேன்மீது திருவுளம் கொண்டு உரைத்தருளல் வேண்டும்" என்று பணிவுடன் வினவினன்.

மாந்தாதாவின் பணிவுமிக்க வார்த்தைகளைக் கேட்ட நாரதர், மன்னனை நோக்கி, "ஓ மாநிலம்காவல, உன் அன்புமிக்க வார்த்தைகளைக் கேட்ட என் மனம் மகிழ்ச்சி படைந்தது. ஆகையால் அதைச் சொல்லுகின்றேன் கேள்.

சகல ஜீவகோடிகள் உய்யும்வண்ணம் ஜகதீசன் எழுந்தருளியிருப்பதுவும், இந்திராதி தேவர்களும், வசிஷ்டாதி முனிவர்களும் போற்றும் பெருமைவாய்ந்த வேதவனத்தி லுள்ள பாபநிவாரிணி என்று சொல்லத்தக்க மணிகர்ணிகையில் ஸ்நானம் செய்தேன். இப்படிப்பட்ட இவ்வேதவனத்தில் மாதாவை யணைந்த மகா சண்டாளனாகிய கோலாகலனுக்குக்கூட சாம்பசிவமூர்த்தி கைலையை யளித்ததை நினைத்து நினைத்து, என் மனமானது ஆனந்தமடைகின்றது" என்று சொல்ல, உடனே மாந்தாதா நாரதரை வணங்கி வேதவன வைபவத்தை உரைக்குமாறு வேண்ட, திரிலோக சஞ்சாரியாகிய நாரதரும் உரைக்கலானார்.

## இராமபிரான் பிரமஹத்தி ஒழிந்த விதம்.

இவ்வாறு மாசற்ற மன்னனாகிய மாந்தாதா நாரத முனிவரைப் பார்த்து, வேதவன வைபவத்தை உரைத்தருளும்படி வேண்ட, பிரம்மபுத்திரராகிய நாரதபெருமான் சந்தோஷபரவசராகி, மாந்தாதாவை நோக்கி, "ஓ மாநிலம் காக்கும் மஹானுபாவா, நீர் மிக்க புத்திமானாகையால் நல்ல விஷயங்களைக் கேட்க ஆவல்கொண்டீர். ஆகையால் சொல்லுகின்றேன் கேள்" என்று சொல்லி வேதவனப் பெருமையை உரைக்கலானார்.

ஆதியில் மண்ணுலகில் தர்மமானது சிரமிந்து, அதர்மமானது நாளுக்கு நாள் அதிகரித்து, துன்மார்க்கர்கள் மிகுந்து, சன்மார்க்கர்கள் குறைந்து, பெரியோர், சிறியோர் என்னும் பேதமில்லாமல், வலியவர்களால் எளியவர்கள் துன்பப்படலாயினர். இதனால் பூபாரம் அதிகரிக்க, தேவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி, கொடிய அரக்கர்களால் தங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களைப் பொறுக்கமாட்டாதவர்களாய், பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமன் இடத்திற்குச் சென்று பணிந்து, தங்கள் குறைகளைத் தீர்த்தருளும்படி வேண்டினர். அனுதரக்ஷகனாகிய அரியாசனனும் திருவுளங்கொண்டு, தேவர்களின் குறைதவிர்த்து, பூபாரம் ஒழிக்கும்பொருட்டு, அயோத்திமா நகரில் தசரத சக்ரவர்த்தியின் அருந்தவப் புதல்வனாய் அவதரித்து, இளமையிலேயே சகல கலைகளையும் ஓதியுணர்ந்து, அரசர்க்குரிய வித்தைகளை மாசறக் கற்றுத் தேர்ந்து, விசுவாமித்திரரின் வேள்வியைக் காத்து, தாடகை, சுபாகு முதலிய அசுரர்களைக் கொன்று, சிலையை ஒடித்து, சீதையை மணந்து, சிறப்புடன் இருக்குங்காலையில், தந்தையளித்த வரங்களை நிறைவேற்றும்பொருட்டுத் தாய் வார்த்தையைத் தட்டாமல் மண் துறந்து, ஆரண்யமடைந்து, பஞ்சவடியில் பர்ணசாலை யமைத்து வசித்துவரும் நாளில், விதிவசத்தால் சீதையின் வேண்டுகோளுக்கிணங்கி, மாரீசன் என்னும் மாயமானைப் பிடிக்கும்பொருட்டு அதனைப் பின்தொடர, பின்னர் அவருக்குத் துணையாகத் தம்பி இலக்ஷ்மணனும் போக, தனித்திருக்கும் சமயம் பார்த்து, இலங்காதிபதியாகிய இராவணன் போலி சன்னியாசி வேடம்பூண்டு, சீதையை எடுத்துக்கொண்டுபோனான். பின்னர் சீதையைப் பலவிடங்களில் தேடியும் காணாமல், வானரவீரர்களாகிய

சுக்கிரீவன், அனுமார் முதலியோரின் உதவியைப்பெற்றுக்கொண்டு, கடலைக்கடந்து, இராவணாதி அசுரர்களைச் சம்ஹாரம் செய்து, ஜயபேரிகையுடன் பத்னி சீதாதேவியுடனும், தம்பி இலக்ஷ்மணனுடனும், வானரசேனைகளுடனும் அயோத்தி நோக்கித் திரும்புங்காலையில் பிரம்மஹத்தி தொடர்ந்துவர, அதனால் வாடிய வதனத்துடனும் சோர்ந்த மேனியுடனும் இருக்கும் கௌசலைகுமாரனைக் கண்ட முனிவர்கள் மிகவும் கவலைகொண்டு, இராமனை நோக்கி, "ஓ துஷ்டசம்ஹாரனே, பிரம்மஹத்தி தொடர்ந்ததினால் உன்முகாரவிந்தமானது வாடி ஒலியற்றிருக்கிறது. ஆகையால், நீ உன்னால் கட்டப்பட்ட ஆதிசேதுவில் பரமேஸ்வரனைக் குறித்துத் தவம் செய்தால் பிரம்மஹத்தி விலகிவிடும்" என்று உரைத்தார்கள்.

இராமபிரானும் மனமகிழ்ச்சியடைந்து அவ்வாறே செய்யும்பொருட்டுத் தன் வில்லின் நுனியினால் சேதுவின் அணையை நடுவிலுடைத்து, அரக்கர்கள் உள்ளே வராமலிருக்கும்படி செய்துவிட்டு, அருந் தபசிகள் அறுபத்தெண்ணாயிரம் இருடியர்களுடன் அதனுள்ளே சென்று தவம்செய்வதற்கு ஏற்ற இடம் பார்க்கும்போது, முனிவர்கள் இராமபிரானைப் பார்த்து, "இராமா, நாம் தவஞ்செய்வதற்குத் தகுந்த இடம் சத்தியகிரி என்றொரு மலையிருக்கிறது. அம்மலையில் சத்தியவதி என்னும் ஒரு புண்ணியதீர்த்தம் உற்பத்தியாகி வடக்குத் திக்கை நோக்கி ஓடுகின்றது. அம்மலையைக் கவயன் என்கிற வானரவீரனால் சேதுவின் அருகில் வைக்கப்பட்டபடியால், இப்பொழுது சமுத்திரத்தில் சேர்ந்துவிட்டது. அவ்விடம் அரக்கர்கள் வராமலிருப்பதற்கும், தவம் செய்வதற்கும் சௌகரியமாயிருக்கும்.

அம்மலையின் மேற்றிசையில் சென்று தவம் புரிவோமாகில் ஜகதீசன் பிரத்தியட்சமாவான்'' என்று மொழிந்தனர்.

முனிவர்களின் மொழிகளைக் கேட்ட தசரத இராமனும் தைரியங்கொண்டு சத்தியவதி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, மேற்றிசையில் அமர்ந்து அரிய தவஞ்செய்யலானார். இராமபிரானின் தவத்தைக் கண்ட கைலநாதன் மனமுவந்து, காட்சியளிக்கும்பொருட்டு பங்குனி மாதம், உத்திரநக்ஷத்திரத்தில் கூடிய பௌர்ணமி பகல் பதினைந்து நாழிகையில் திவ்விய தேஜோமயமான லிங்கஸ்வரூபியாய் மகா பாபங்களைக் கருவறுக்கும் மணிகர்ணிகையுடன் எழுந்தருள, இராமபிரானும் தவத்தை நிறுத்திக் கண் விழித்துத் தன் முன்னே நிற்கும் சாம்பசிவமூர்த்தியைக் கண்டு ஆனந்தபரவசமடைய, நமச்சிவாயரும் திருவுளம் கொண்டு, இராமனை நோக்கி, "தேவர் குறையகற்றிய தசரத தனயா, நீ அன்புடன் இயற்றிய தவத்திற்கு மகிழ்ந்து உன் துயரை போக்க மணிகர்ணிகையுடன தோன்றினோம். துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனத்தின் பொருட்டு அவதரித்து, கொடிய அரக்கரை அறவே தொலைத்து வீரலக்ஷ்மியுடன் திரும்பியபோதிலும், அவர்கள் பிரம்மகுலத்தைச் சேர்ந்தவர்களாகையால் பிரம்மஹத்தி உன்னைத் தொடர்ந்தது. இதற்காக நீ வருந்தவேண்டாம். உன்பொருட்டு கொண்டுவந்த இம்மணிகர்ணிகையில் ஸ்நானம்செய்து, மேற்குக்கரையில் லிங்கம் இயற்றி ருத்திரபூஜை செய்வாயாகில் உன் பிரம்மஹத்தி தொலைந்துவிடும். இப் புண்ய மணிகர்ணிகையில் ஸ்நானம் செய்பவர்கள், தங்கள் பாப கர்மங்களை ஒழித்து, பரிசுத்த மனதுடையவர்களாய் விளங்குவார்கள். காசியில் கால ஸ்நானமும், மணிகர்ணி

கையில் மத்தியான ஸ்நானமும் சமமான பலனையளிக்கும்" என்றுரைத்தார்.

கைலைநாதனின் திருமொழிகளைக் கேட்ட இராகவன் உள்ளம் குளிர்ந்து, கைகுவித்து வணங்கி, "ஓ பஞ்சாக்ஷர மூர்த்தியே, நீ என்மீது கருணைகொண்டு காட்சியளித்ததைப்போல் சகல ஜீவகோடிகளும் கடைத்தேறும்வண்ணம் இவ்விடத்திலேயே எழுந்தருளவேண்டும்" என்றுரைக்க, மங்கைபாகனும் மனமுவப்புடன் அவ்வாறேயாகுக என்று மொழிந்து லிங்கத்தில் மறைந்தார்.

உடனே சீதாராமன், சகல முனிவர்களோடும் வானரர்களோடும் மணிகர்ணிகையில் தீர்த்தமாடி, மஹாலிங்கத்தைப் பூஜிக்க, பிரம்மஹத்தி ஒழிந்து, நிர்மலமனதுடனும் வீரதேஜசுடனும் அயோத்தி அடைந்தார். அதன்பின்னர் அருகிலிருந்த வனங்களில் வாசஞ்செய்துவந்த முனிவர்களனைவரும் மணிகர்ணிகையின் மகிமையை யறிந்து வேதவனத்திற்கு வந்து மணிகர்ணிகையில் ஸ்நானஞ்செய்து லிங்கத்தைப் பூஜித்து முத்தியடைந்தனர்.

## பஞ்சாக்ஷர மகிமை.

நாரதர், மறுபடியும் மாந்தாதாவை நோக்கி, ஓ வெற்றிமாலை சூடிய வேந்தனே! இந்த ஸ்தலத்தில் ஆதிராமனால் சேதுபந்தனம் செய்யப்பட்டபடியால் இதற்கு ஆதிசேது என்று பெயர் ஏற்பட்டது. இந்த ஆதிசேதுவில் பர்வகாலம், விசு, அயனம், வியதீபாதம், கிரஹணம், அர்த்தோதயம், மகோதயம் முதலிய புண்ணிய காலங்களில் ஸ்நானம் செய்தால் மிகவும் பலன் உண்டு. இவ்வேத

வனத்திலுள்ள லிங்கத்தில் பிரளய காலத்தில் வேதங்களும், சாஸ்திரங்களும், புராணங்களும் வைக்கப்பட்டுச் சிருஷ்டிகாலத்தில் மறுபடியும் தோன்றுகின்றது. ஆகையால் இந்த லிங்கத்திற்கு பிரளயகாலத்திலும் நாசமில்லை. இது பஞ்சாக்ஷர மயமாயுள்ளது. இந்த ஸ்தலத்திலுள்ள சேதுவில் ஸ்நானம் செய்வதற்கு காலநியமனங் கிடையாது. எல்லா காலங்களிலும் எல்லா வாரங்களிலும் ஸ்நானஞ் செய்யலாம்.

இதைத் தவிர மற்ற சமுத்திர ஸ்நானத்திற்குக் காலயோகம் பார்க்கவேண்டும். சத்தியகிரியில் ஒரு மாதம் இந்திரீயத்தை யடக்கி ஆகாரத்தை நீக்கி நியமத்துடனிருந்து ஐந்து லக்ஷம் பஞ்சாக்ஷர ஜபம் செய்தால் பஞ்சமா பாபங்களும் பறந்தோடும். மணிகர்ணிகையில் ஸ்நானஞ் செய்து, விக்னேசுவர லிங்கத்தைத் தரிசித்துப் பஞ்சாக்ஷர மந்திரத்தை ஐந்துலக்ஷ முறை துதித்தால் கைலையில் கணங்களுக் கதிபதியாவான். பானுவாரத்துடன் கூடிய அமாவாசையில் வேதவனத்திலுள்ள மூன்று தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துப் பித்ருக்களை உத்தேசித்துப் பிண்டதானஞ் செய்தால் நரகவாசிகளாயிருந்தாலும் தங்கள் பாபங்கள் தீரப்பெற்று திவ்விய விமானத்திலேறி கைலையை யடைவார்கள், யாரொருவருடைய கேசவம், நகம், அஸ்தி முதலியவைகள் புத்திரனாலே வேதவனத்தில் ஸ்தாபனஞ் செய்யப்படுகின்றதோ அவர்கள் சிவசாரூப்பியத்தை யடைவார்கள். இத்தகைய பெருமைமிக்க க்ஷேத்திரத்தில் பிரவேசித்த தினத்தில் உபவாசமிருந்து மணிகர்ணிகை யடைந்து அரையளவு ஜலத்தில் நின்றுகொண்டு வேதமந்திரங்களை உச்சரித்துத்

தன் வம்சத்திலுண்டான பித்ருக்களின் நாமங்களை ஜபித்து ஸ்நானம் செய்தால் விதவைகளுக்கும் முத்தி சித்திக்கும்.

## வேதாரண்ய ஸ்தல வரலாறு.

ஒரு காலத்தில் சகல வேதங்களும் மறையும் கர்ணு இருடபவாகனனுகிய கங்காதரனைத் தரிசித்துப் பாபங்களை நிவர்த்தி செய்துகொள்ளும்பொருட்டு வேதவனத்தின் வடபாகத்தில் வேதாமிர்தம் என்னும் தீர்த்தத்தை உண்டுபண்ணி, அதில் தீர்த்தமாடி, மகாலிங்கத்தையடைந்து கைலாசமூர்த்தியைக் குறித்து அரிய தவமியற்றின. அவைகளின் தவத்தினைக்கண்டு ஜகதீசனும் மகிழ்ந்து வேதங்களின் முன் தோன்றி வேண்டுவனவற்றை வினவுங்களென மறைகளும், உளமகிழ்ந்து, சிவபெருமானைப் பலவாறு தோத்தரித்து, ஜகத்ரக்ஷகா, "நாங்கள் பாபிகளாலும், கோஹபாதகர்களாலும், மெய்ப்பொருளறியா மூடர்களாலும் ஜபிக்கப்பட்டு சாரமும், வீரமுமற்றபடியால் எங்கள் தோஷங்களைப் போக்கி, தாங்கள் எழுந்தருளியிருக்கும் இப்பதியிலேயே கொடிகளாகவும், செடிகளாகவும், விருக்ஷங்களாகவும் மாறி எவருமறியாம லிருக்கவேண்டும். மற்றும் இப்புண்ணிய சத்தியநதிக்கு வேதாநதி என்றும், இங்கிருந்து அரையோசனை தூரம் சமுத்திரத்தில் வியாபித்திருப்பதற்கு வேததீர்த்தம் என்றும், இத்திருப்பதிக்கு வேதாரண்யம் என்றும், எங்களால் ஆக்கப்பட்ட தீர்த்தத்துக்கு வேதாமிர்தம் என்றும் திருநாமங்கள் பெற்று பிரசித்தியடைய அருளவேண்டும். மார்கழி மாதம், வியதீபாதம், சூர்யோதயத்தில் தாங்கள் எங்களுக்குக் காட்சியளித்தபடியால் இத்திருநாளில்

வேதாமிருதம், வேததீர்த்தம், கோடிதீர்த்தம், மணிகர்ணிகை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் தீர்த்தமாடிய வர்களுக்கு சாயுச்சியபதவி யளிக்கவேண்டும்" என்று பணிவுடன் வேண்டின. பரமனும், அவ்வாறே கிருபை செய்து மறைந்தார். அன்றுமுதல் இந்த ஸ்தலமானது வேதாரண்யம் என்னும் பெயருடன் விளங்குகின்றது. மாதாவை யணைந்த மகா சண்டாளனும் வீடுபெற்ற இவ் வேதாரண்ய திருப்பதியின் மகிமையை சொல்லிமுடியாது.

## தாயை யணைந்த தனயன் முத்திபெற்றது.

இவ்வண்ணம் முக்குருமபொழிந்த முனிசிரேஷ்டர் வேதாரண்ய திருப்பதியின் பெருமையை ஆதியோடந்த மாய் உரைக்க, மாந்தாதா மிகவும் மனமகிழ்ச்சிகொண்டு நாரதரைப் பணிந்து, "சுவாமி, வேதவனமாகிய வேதா ரண்ய க்ஷேத்திரத்தின் வரலாற்றினை விரிவாய் உணர்ந் தேன். தேவரீர் மனமுவந்து கோலாகலன் கைலையடைந்த விதத்தை உரைத்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, கன்மநாசராகிய நாரதரும், மாந்தாதாவின் குணாரவிந்தங் களுக்கு மகிழ்ந்து உரைக்கலானார்.

பல்லாண்டுகளுக்கு முன் சாகலபுரத்தில் கோலா கலன் என்றொருவன் இருந்தான். அவன் தன் மாதாவி னிடத்தில் காதல்கொண்டு பலாத்காரமாய்த் தன்வசப் படுத்தி அதற்கு இடையூராயிருந்த பிதாவைக் கொன்று விட்டான். இக்கொடிய செயலைக்கண்ட அவன் பந்துக்க ளனைவரும் கொற்றவனிடத்தில் முறையிட, செங்கோல் அரசன் அவனைத் தேசப்பிரஷ்டம் செய்தான். வேந்த னின் தண்டனையைக்கேட்ட கோலாகலன் விசனமிக

வடைந்து தன் தாயை அழைத்துக்கொண்டு ஆரண்ய மடைந்தான். அங்கு வழிப்பறி செய்தும், மிருகங்களைக் கொன்றும் ஜீவித்துவருநாளில் இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். இவ்விதமாகப் பல வனங்களிலும் சுற்றித் திரிந்து பல வருடங்கள் கழிந்தன. முடிவில் தெய்வச் செயலாக வேதாரண்ய மடைந்து, வேதாமிருத தீர்த்தத்தி னருகில் குடிசில் ஒன்றமர்த்தி கொடிய பாபங்களைப் புரிந்து வருநாளில் திடீரென கோலாகலன் இறந்துபோனான். அன்றைய தினமே அவன் மனைவியும், புத்திரர்களிருவரும் புலியினால் கொல்லப்பட்டார்கள்.

இவ்வண்ணம் குடும்பத்துடன் ஒரே நாளில் மறித்த அவர்களை கைலாயபதியினால் அனுப்பப்பட்ட தூதர்கள் இரத்தினமயமான விமானத்தில் ஏற்றிக்கொண்டு கைலைக் குச் சென்றனர். அச்சமயத்தில் யமதர்மனால் அனுப்பப் பட்ட தூதர்கள் இவ்விபரீதத்தைக்கண்டு, ஆச்சரியமெய்தி, "ஹா! இதென்ன விபரீதமாயிருக்கிறது! மாத்ருவை மணந்தவனும், பித்ருவைக் கொன்றவனும், மகா சண்டாள னுமாகிய இவனைச் சிவதூதர்கள் தேவவிமானத்தில் ஏற் றிக்கொண்டு செல்கின்றனரே!" என்று தங்களுக்குள் நினைத்துக்கொண்டு யமபுரத்திற்குச் சென்று தங்கள் தலை வனிடத்தில் நிகழ்ந்தனவற்றை விரிவாய் உரைத்தனர்.

தூதர்களின் மொழிகளைக் கேட்ட காலனும் மனம் திடுக்கிட்டு, சித்திராபுத்திரனை அழைத்து, தர்மாதர்மங் களைப் பரிசோதித்துப் பார்க்க, எள்ளளவேனும் புண்ணி யஞ் செய்யாததைக் கண்டு, மிகவும் ஆச்சரியமும், கோபமு முடைந்து, உண்மை யுணரும்பொருட்டு, காவியுடுத்தி, திரு

நீரணிந்து, மேருபோலுயர்ந்த எருமைமீதேறி, சித்திரா புத்திரனுடன் கைலையை நோக்கிச் சென்று, போகவதி பட்டணத்தை யடைந்து, கைலைநாதன் எழுந்தருளியிருக்கும் ஸ்தலத்தைத் தெரிசித்து, நந்திதேவரிடத்தில் உத்திரவு பெற்று உட்சென்று, ஆலயத்தினடுவில் மணிமண்டபத்தில் உயரிய சிங்காதனத்தில் இந்திராதி தேவர்களோடும், சனகாதி முனிவர்களோடும், கங்கை முதலிய தீர்த்தங்களோடும் சூழப்பட்டு, பராசக்தியோடு வீற்றிருக்கும் ஸ்ரீ கண்ட பரமேச்வரனைக் கண்டு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து பணிவுடன் நின்றான். காலனின் கருத்தையறிந்த கங்காதரனும், கூற்றுவனைத் தன் கடைக்கண்ணால் நோக்கி வந்த காரியம் யாதென வினவினார். அந்தகனும் நிகழ்ந்தனவற்றை விரிவாயுரைக்க, ஈசன் புன்னகை பூத்து, அந்தகனை நோக்கி, "ஓ தருமசீலா, உனக்கு ஏற்பட்ட கோபாவேசத்தைத் தணித்துக்கொள். கோலாகலன் கொடிய நரகத்திற் காளாகவேண்டிய பாபிதான். ஆனால் அவன் வேதவனத்தில் வசித்து இறந்துபோனபடியால் அவன் செய்த பாபங்களெல்லாம் நீங்கப்பெற்று கைலையை யடைந்தான். பக்தர்களை ரக்ஷிக்கும் சிவக்ஷேத்திரத்தின் மகிமையை உரைக்க யாராலாகும்! ஆகையால், இனிமேல் என்னுடைய திருப்பதியை யடைந்தவர்களைப் பற்றுமலிருப்பாயாக!" என்றருளினார்.

ஈசன் அருள் மொழிகளைக் கேட்ட அந்தகன் முகவாட்டத்துடன் பெருமானைப் பணிந்து, "இறைவனே, கொடிய சண்டாளனாகிய கோலாகலன் மாதாவை மருவியும், பிதாவைக் கொன்றும் தங்களை அடைந்திருப்பதனால் தங்களைத் துரிசிப்பவர்கள் இவனையும் தரிசிக்கவேண்டி

யிருக்கின்றதே! இவனுக்கு இணங்கியிருந்த தாயானவள் மகா தேவதையைப் போல் விளங்குகின்றனளே! இவனுடைய குழந்தைகளிருவரும், விநாயக் சுப்ரமணியர்களைப் போல் இருக்கின்றார்களே! ஓ ஆதியந்தமிலா பொருளே, கருணையங்கடலே, இவ்வாறு வேதாரண்யம் அடைந்தவர்களுக்கெல்லாம் முத்தி யளிப்பதாயிருந்தால், துன்மார்க்கர்கள் அதிகரித்து, சன்மார்க்கர்கள் குறைந்து, தர்மம் சிர்குலைந்து, அதர்மம் நிலைபெற்று, மானுடகோடிக ளனைவரும் பஞ்சமகா பாபங்களைச் செய்வதற்குத் தலைப்பட்டு வேதாரண்ய மிருக்கின்றதென்பார்களே! அதுவன்றியும், வேதத்தியானம், நித்திய கர்மானுஷ்டானம், ஈசுவர பூஜை, வேதாந்தவிசாரம், தவம், தானம், தயை முதலியன அழிந்து, எங்கும் துஷ்டர்கள் அதிகரித்து, பூபாரம் அதிகரிக்குமே! ஓ சர்வலோக தேவா, இவனென்ன யோகியா? அல்லது மகா மாதம் முதலிய புண்ணியகாலங்களில் வேததீர்த்தத்தில் ஒரு ஸ்நானமாவது செய்தானா? யாதொரு சத்கார்யமும் செய்யாத இவன் இப்பேர்ப்பட்ட பதத்திலிருக்கின்றானே! ஸ்வாமி, பாபிகளைப் படுகுழியில் தள்ளென்று தாங்கள் முன்பு கட்டளையளித்ததை யெண்ணி இவ்வாறு சொன்னேன்" என்றியம்ப, உமாபதி மனமிக மகிழ்ந்து, காலனை நோக்கி, "ஓ யமதர்மனே, கவலையொழி க்ஷேத்திர வைபவம் அத்தகையது. அதற்கென் செய்யலாம்" என்றுரைக்க, கூற்றுவனும் விடைபெற்று இருப்பிடம் ஏகினன்.

ஓ கொற்றம் குறைதீர்க்கும் கொற்றவர், ரௌரவாதி நரகங்களையும் வேரறுத்தொழிக்கும் வேதாரண்யத்தைத் தரிசிப்பதாகச் சொல்லி தரிசிக்காதவர்களைப் பிதுர்க்கள்

சபிக்கிறார்கள். இப்பதியில் சிவராத்திரி தினத்தில் உப வாசமிருந்தால் ஆயிரம் சிவராத்திரிக்குச் சமமான பலனை யடைவார்கள்.

## வேதவனத்தில் அகஸ்தியருக்குக் காட்சியருளியது.

இவ்வண்ணம் வேதவன வைபவத்தை நாரதர் விமரி சையாக உரைத்தபின்னர் மீண்டும் மாந்தாதாவை நோக்கி, ஓ வெற்றிமாலை சூடிய வேந்தனே, காட்சியளிப்பதில் சிறந்த கைலயங்கிரிநாதனின் பெருமையை இன்னும் உறைக்கின் றேன் கேள்.

சர்வ பாப சஞ்ஜீவியென விளங்கும் மணிகர்கைக்கு தெற்கேயுள்ள சத்தியகிரியின் கொடிமுடியில் சங்கரற்கொப் பான அகத்திய முனிவர் அரிய பெரிய தவங்கள் செய்ததின் பயனால், கடகம், கிரீடம், மகரகுண்டலம், முத்துவடம், தோள்வளை, ஒட்டியாணம், பாதசரம் முதலிய திவ்வியா பரணங்களை யணிந்து, உமாதேவியுடன் விளங்கும் உமா மஹேஸ்வரரின் திருமண வைபவத்தை வேதவனத்தில் கண்ணாரக் கண்டு மகிழ்ச்சி யடைந்தார். அன்றியும் வேத வனத்தில் ஸ்ரீராமபிரானால் இயற்றியருளப்பட்ட தனுஷ் கோடிக்கு வடக்கே சுமார் யோசனை தூரத்திலுள்ள சத் தியகிரியின் சிகரத்தில் சகல தீர்த்தங்களையும் ரக்ஷித்துக் கொண்டு மகாவிஷ்ணு எழுந்தருளியிருக்கின்றார். அப் பெருமானைத் தரிசித்த பின்னர், அர்த்தோதயம், மகோத யங்களில் தனுஷ்கோடியில் ஸ்நானம் செய்தால் ரௌவாதி நரகங்களும் அடியோடு அழிந்து கலங்கமற்ற மனதுடன் விளங்குவார்கள்.

இவ்வண்ணம் நாரதர் உரைக்கக்கேட்ட மாந்தாதா, அக மகிழ்ந்து, நாரதரை வணங்கி, "சுவாமி, சுந்தரேசர் மலை ராஜன் மகளை மணந்து தேவர்களுக்கும், முனிவர்களுக் கும் இமயமலையில் காட்சி யளித்தாரேயன்றி, வேதாரண் யத்தில் அகஸ்தியருக்கு மாத்திரம் எங்ஙனம் காட்சியளித் தார் என்று என் மனம சங்கை கொண்டிருப்பதனால் தேவரீர் தயைகூர்ந்து உரைத்தருளல்வேண்டும்" என்று பணிவுடன் வினவ, நாரதரும் உளமகிழ்ந்து விளம்ப லானார்.

ஓ பூமண்டலாதிப, சொல்லுகின்றேன் கேள். முன் னாளில் நித்திய கல்யாண பெருமானாகிய பார்வதிநாதன் திருமண வைபவத்தைத் தரிசிக்கும்பொருட்டு சனகாதி யோகிகளும், வசிஷ்டாதி முனிவர்களும், குபேராதி யக்ஷர் களும், விரோசனாதி அசுரர்களும், பிரம்மாதி தேவர்களும், சித்தர், வித்தியாதரர், கருடர், கந்தருவர் முதலானவர் களும் இமயமலையின் முடியில் சங்கமாக, உடனே பூமியின் வடதிசையானது மிகவும் பாரமாகி, கீழே அழுந்த, தென் திசையானது மேலோங்கியது. இக்கோலத்தைக் கண்ட தேவர்களும், முனிவர்களும் மிகவும் கலக்கமடைந்து, பசு பதியைப் பணிந்து, "ஓ ஆபத்பாந்தவா, தீனதயாளா, தங்கள் திருக்கல்யாண கோலத்தைக் காணவந்த எங்க ளுக்கு நேர்ந்த இவ்வின்னலினைத் தீர்த்தருளல்வேண்டும்" என்று வேண்டினர். பரமனும் மனமிரங்கி, தவசிலரும், தன் திருவுளத்திற் கிசைந்தவருமாகிய அகத்திய முனி வரை அருகழைத்து, "பக்தசிகாமணியே! என் மணக் கோலத்தைக் காணவந்த இவர்கள் படும் துன்பக்கோலத் தைக் காண மிகவும் பரிதாபகரமாயிருக்கின்றது. ஆகை

யால் நீர் தென்திசையை நோக்கிச் சென்று, ஆகாயத்தை அண்ணாந்திருக்கும் விந்தியனை அமுத்தி, வில்வல வாதாபி யசுரர்களை ஒழித்து, தென்திசையிலுள்ள வேதவனத்தில் இருப்பாயாக" என்றருளினர்.

சுந்தரேசரின் அருள் மிக்க இனிய வசனங்களைக் கேட்ட அகத்தியர் மனம் மிக வாடி, பரம்பொருளை வணங்கி, "சுவாமி, சகல தேவர்களும், முனிவர்களும் தங் திருக்காட்சியைக் காண, அடியேன் மாத்திரம் அங்கிருப்பது எவ்வாறு?" என்று வினவ, பக்தரக்ஷகனாகிய பார்வதி சமேதனும், புன்னகை புரிந்து, அகத்தியரை அன்புடன் தழுவி, பக்த, "நீ உன் கவலையை அரவே ஒழிப்பாயாக. நாம் உமக்கு இத்தகைய திருமணக்கோலத்துடனே வேதாரண்யத்தில் காட்சி தந்தருள்வோம். ஆதலின் நீர் எதற்கும் அஞ்சாமல் விரைந்து செல்மின்" என்றியம்ப, அகத்தியரும் ஒருவாறுதேறி, தென்திசையைநோக்கி விரைந்து சென்று, வானுறவோங்கிய விந்தியனை யழுத்தி, வில்வல வாதாபி யசுரர்களைச் சம்ஹரித்து, வேதவனத்தை யடைந்து, மணிகர்ணிகை, வேதாமிருதம், வேததீர்த்தம், தனுஷ்கோடி முதலிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, மஹா லிங்கத்தை விதிப்படி பூஜித்து, அதற்கருகில் ஒரு பர்ணசாலை அமைத்துக்கொண்டு தவமியற்றி வந்தார்.

இவ்வண்ணம் சில காலம் கடந்தபின்னர், ஈசுவரன் தேவியோடு திருமணகோலங் கொண்டு தேவர்களும், முனிவர்களும், கணங்களும் நாற்புறமும் சூழ்ந்து விளங்க, வேதவனத்தில் அகஸ்தியருக்குக் காட்சியளித்தார். பார்வதி சமேதனின் திருமணக் காட்சியைக் கண்ட அகத்தியர்

ஆனந்தபரவசராகி, பரமனைப் பலவாறு பாடி, சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, பணிந்து நிற்க, ஜகதீசன் அகத்தியரை அன்போடு கட்டித் தழுவி, "அன்ப, என்பால் அன்புமிகப் பூண்ட நீர் வேண்டுவது யாது?" என்றருளினர். அதற்கு அகத்தியர் மகிழ்ச்சி கொண்டு உமாபதியைப் பணிந்து, "சுவாமி, தேவரீர் அடியேனுக்குக் காட்சி தந்தருளிய இந்த சித்திரை மாதம், ஞாயிற்றுக்கிழமையுடன் கூடிய சுக்கில பக்ஷம், சப்தமி மத்தியானத்தில் இத்திருக் கோலத்துடனே சகல ஜீவான்மாக்களுக்கும் காட்சி கொடுத்தருளவேண்டும். சித்திரை மாதத்திலும், மாசி மாதத்திலும் உம்முடைய தரிசனம் கண்டவர்களுக்குப் புத்தி, முத்திகளை யளித்தருளவேண்டும்" என, உமைப் பாகனும் அவ்வாறே யாகுகவென்றருளி தேவியோடு லிங் கத்தினுள் மறைந்தார். இவ்வரிய புண்ய சரிதத்தைப் படித்தவர்களுக்கும், கேட்டவர்களுக்கும் சந்ததிவிருத்தி யாகுமென்று நாரதமுனிவர் மொழிந்தார்.

## பஞ்சாக்ஷர மகிமை.

இவ்வண்ணம் கையைங்கிரிவாசன் வேதவனத்தில் அகத்தியருக்குக் காட்சியளித்த வரலாற்றை ஆதியோடந்த மாகக் கேட்ட மாந்தாதா, தன்னகத்துக்கொண்ட கவலை யொழிந்து, சந்தோஷபரவசராகி, மீண்டும் நாரதமுனி வரைப் பணிந்து, "சுவாமி, வசிஷ்டாதி முனிவர்களும், சனகாதி யோகிகளும், பிரம்மாதி தேவர்களும், குபோரதி யக்ஷர்களும் அனுஷ்டிக்கத் தக்கப் பஞ்சாக்ஷரத்தின் மகி மையைத் தெளிவாக உரைத்தருளவேண்டுமென்று வினவ, முக்குறும்பொழிந்த நாரதமுனிவர் மொழியலானர்.

சர்வ கோடி ஜீவான்மாக்களையும் பரிபாலிக்கும் சார்வ பௌமா, கேள். அனந்த மந்திரங்களுள் பஞ்சாக்ஷரம் மகா சிறந்த மந்திரமாகும். இவ்வரிய மந்திரம் சர்வ தேசத்தவர்களும், சர்வ மதத்தவர்களும், சர்வ காலங்களிலேயும் அனுஷ்டிப்பதற்குப் பொதுவானதும், சிறந்ததுமாகும். இம்மந்திரத்திற்குரிய சில முக்கிய க்ஷேத்திரங்கள் உள. அவைகளுள் முக்கியமானவை: பிரயாகை, நைமிச்வனம், காசி, கேதாரம், பதரிகாவனம், சித்திரைசிலை, மானசசரஸ், மந்தரபர்வதம், காஞ்சிபுரம், திரியம்பகம், சப்தகோதாவரி தீரம், ஸ்ரீசைலம், விருஷணசலம், தீர்த்தபர்வதம், கோபர்வதம், சங்கமலை, சூலமலை, ஸ்கந்தகிரி, சித்திரகூடம், ரத்தினகிரி, மகூஷிகமலை, திருவானைக்காவு, சீர்காழி, பீமவரம், திருக்கடையூர், மத்தியார்ச்சுனம், திருவாவடுதுறை, மாயூரம், பார்சுபத க்ஷேத்திரம், ஸ்ரீமகானம், ஸ்தானுகாதம், திருப்பணம், வில்வவனம், திருவாரூர், வேதாரண்யம் முதலியன சித்தி ஸ்தலங்கள். இவைகளில் வேதாரண்யம் மிகவும் உத்தமமாகும். மற்ற ஸ்தலங்களில் ஆயிரம் ஜபங்களில் சொன்ன பலன் வேதாரண்யத்தில் ஒரு ஜபத்தில் சித்திக்கும்.

பானுவாரத்துடன் கூடிய அமாவாசை தினத்தில் மணிகர்ணிகையில் அரையளவு ஜலத்தில் கிழக்கு திசையை நோக்கி பன்னீராயிரம் பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபம் செய்தால் சகல பாபப்பிணிகளும் நாசமாகி, நாடிய பொருள் கைகூடும். இவ்வாறு ஜபம் செய்பவனைப் பிரம்மஹத்தி பற்றியவன் கண்டால் அவன் தோஷங்கள் அனைத்தும் பரிதியைக் கண்ட பனியைப் போல் பறந்தோடும். இவ்வண்ணம் ஜபம் செய்துகொண்டு வியாசர் முதலான ரிஷிகளும்,

கபிலர் முதலான யோகிகளும், அறுபதினாயிரம் வாலகில்லியர்களும் வேதாரண்யத்தில் வசிக்கின்றார்கள். அர்த்தோதயத்தில் பகல் நேரங்களில் மணிகர்ணிகைக் கரையில் குலதானமும், வேததீர்த்தக் கரையில் சுவர்ணதானமும், வேதாமிருதக் கரையில் பூதானமும், தனுஷ்கோடியில் ரஜததானமுஞ் செய்து, வன்னிமரத்தடியில் பிராம்மண சந்தர்ப்பணம், தக்ஷிணை, தாம்பூலம் கொடுத்தால் சகல பாபப்பிணிகளும் நீங்கி முக்திக்கு அருகனாவான்.

அர்த்தோதய புண்ணிய காலங்களில் ஸ்நானம், மாதர் கமனம், க்ஷவரம் முதலியனவற்றைத் தள்ளி, சூரிய வெப்பத்தை உட்கொண்டு நியமத்துடன் வேதவனத்தைக் குறித்து யாத்திரைசெய்தால், ஆறுயோசனத்திற்கு ஒரு பிரஜாபத்திய பலனுண்டு. மார்கழி மாதம், திருவாதிரை நக்ஷத்திரத்தில் கூடிய பௌர்ணமியில் விடங்கேசனைத் தரிசித்தவர்கள் தேவவிமானத்தி லேறிக்கொண்டு சர்வ லோகங்களிலேயும் இன்பத்தை யனுபவித்து, முடிவில் கைவல்லியத்தையு மடைவார்கள். அந்நாளில் விருக்ஷங்களாயும், கொடி, செடிகளாயு மிருக்கும் வேதங்கள், பிராணிகளின் முக்தியின்பொருட்டு பஞ்சாக்ஷர மந்திரத்தை நாவார நவிலுகின்றது. வன்னிமரத்தடியில் நூற்றெட்டு முறை ஜபம் செய்தவன் அன்னிய தேசங்களில் மரித்தாலும் முத்தியடைவான். அவ்வாறு மரிக்குங்காலையில் வேதவனேசன் அவன் வலது காதில் பஞ்சாக்ஷரத்தை உபதேசிக்கின்றார். வேதவனத்தில், எறும்பு முதல் யானை சுருக்வுள்ள சகல ஜீவஜந்துக்களெல்லாம் இறக்குங்காலையில், வலது செவியை மேல்நோக்கி ஜகநீசனால் அருளப்படும் பஞ்சாக்ஷர மந்திரத்தைக் கேட்டு மரிக்கின்றது.

17283

## வேதவன சிறப்பு.

இங்ஙனம் பஞ்சாக்ஷரத்தின் பெருமையை விமரிசையுடன் கூறியபின்னர் மீண்டும் நாரதர், மாந்தாதாவை நோக்கி, மன்னர் மன்ன, இவ்விஷயத்தில் ஒரு சரித்திரம் சொல்லுகின்றேன் கேள். சாதகல்லியபுரவாசியான வேதபர் என்னும் ஓர் அந்தணன் பற்பல தேசங்களுக்கும் சென்று தீர்த்தயாத்திரை செய்துகொண்டு முடிவில், வேதவனத்தை யடைந்து நான்கு தீர்த்தங்களிலும் தீர்த்தமாடி, வன்னிமரத்தடியிலிருந்து பஞ்சாக்ஷரத்தை ஜபித்துக் கொண்டு மஹாலிங்கத்தை விதிப்படி ஆராதித்து முத்தி யடைந்தான்.

மார்கழி மாதத்தில் நான்கு தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்து, சக்திக்குத் தகுந்தபடி ஒவ்வொரு தீர்த்தத்திலும் தானம் செய்து, ஆயிரம் வில்வதளங்களால் ஈசனை யர்ச்சித்து, மாதமுழுதும் நியமத்துட னிருந்தவன் தன் முன்னோர்கள் நூறு பேர்களுடன் சிவனருளைப் பெற்று இன்புறுவான். மனத்தில் தூயபக்தியுடன் வேதவனத்தில் அணுவளவு தானமியற்றியபோதிலும், அவை அளவற்றதாகும். மணிகர்ணிகைக்கு மேற்றிசையிலுள்ள வன்னிமரத்தடியில் பித்ருக்களை உத்தேசித்துச் சிரார்த்தம் செய்தால் அவர்கள் உடனே நற்கதியை யடைவார்கள். மணிகர்ணிகையின் கரையில் பித்ருக்களை உத்தேசித்து கரிய விருஷபத்தை விட்டால் அவர்கள் அவ்விருஷபத்தினுடைய ஒரு ரோமத்திற்கு ஆயிரம் வருடங்களாக சிவலோகத்தில் பதவிபெற்று வாழ்வார்கள். அன்னதானம் செய்தவர்கள் அடைந்த பலனைச் சொல்லிமுடியாது. பாபநாசமென விளங்கும் வேதவனத்தில் சித்திரை, வைகாசி

மாதங்களில் தீர்த்தம் அளித்தவர்களுக்குச் சூரிய சந்திர கிரஹணங்களில் மேருவுக்குச் சமமான சுவர்ணதானம் செய்ததாலுண்டான பலன் உண்டாகும். அனுதினமும் தண்ணீர் அளித்தவர்கள் சிவலோகத்தில் பதவிபெறுவார்கள். பிணியாளர்களுக்கு மருந்து உதவியவர்கள் கைலையையே வாசஸ்தலமாக யடைவார்கள். வறுமையில் வாடுபவனும், வித்துவானுமா யிருக்கும் ஒருவனுக்கு இளம் கன்னிகையைத் தானம் செய்தவர்கள் பித்ருக்கள் மோக்ஷத்தை யடைவார்கள். கோதானம் செய்தவன் கோஹத்தியினின்று விலகுவான். மாசி மாதத்தில் மணிகர்ணிகையில் தீர்த்தமாடியவன் இம்மையில் சர்வ போகங்களையு மனுபவித்து, மறுமையில் வெகுகாலம் சுவர்க்கத்தையும் அடைவான். வேதவனேசனுக்குச் சாமரம், பட்டு வஸ்திரம் முதலியன வளித்தவன் மூன்று கண்களோடிருப்பான். பஞ்சாக்ஷர மந்திரத்தை மாத்திரம் ஜபித்தவன் சதுர் வேதங்களையும் தியானம் செய்தவர்களுடைய பலனையடைவான். மாசி மாதத்தில் தேசாந்திரத்தில் மரித்துச் சம்ஸ்காரம் செய்யப்படாத பித்ருக்களை வேண்டி மணிகர்ணிகைக் கரையிலும், வேதநதி கரையிலும், தர்பசம்ஸ்காரம் செய்து பிண்டதானத்தில் தர்ப்பணம் செய்தால் அவர்கள் நரகத்தினின்று நீங்கிச் சுவர்க்கத்தை யடைவார்கள். இப்படிப்பட்ட வேதாரண்யத்தில் முனிசிரேஷ்டராகிய விசுவாமித்திரர்கூட முத்திபெற்றிருக்கிறார் என்றால் இதன் பெருமையை யுரைக்க யாராலாகும்!

## வேதவனத்தில் விசுவாமித்திரர் முத்திபெற்றது.

மாபெரும் கீர்த்திவாய்ந்த வேதாரண்ய சிறப்பினை நாரதரால் உரைக்கக்கேட்ட மாந்தாதா உளமகிழ்ச்சிகொண்டு

கர்த்தரை நோக்கி, "ஓ மாதவசிரோமணியே, தங்கள் நாவி னின்று தோன்றும் தேனினுமினிய வேதவனச் சிறப்பி னைக் கேட்டு அகங்களித்தேன். ஆயினும், விசுவாமித்திரர் வேதவனத்தில் சித்திபெற்ற வரலாற்றைக் கேட்க என் மனம் மிக்க ஆவல்கொண்டிருக்கின்றபடியால் தேவரீர் தயைகூர்ந்து அடியேனுக்குத் தெரிவித்தருள வேண்டுமென நாரதர் செப்பலானர்.

ஓ பார் பரிக்கும் காவல, மாதவத்தில் சிறந்த விசுவா மித்திரர் பிரம்மரிஷியாக அவதரித்து, சிருஷ்டியின் கிர மத்தை யெல்லாம் பழுதற உணர்ந்து, முடிவில், அவற்றில் பற்றற்றவராய் வேதவனத்தை யடைந்து, சர்வ தீர்த்தங் களிலும் ஸ்நானம் செய்து, பரமபக்தியோடு பரமனைப் பணிந்து, மணிகர்ணிகைக்கு மேற்கே வன்னிமரத்தடியில் வடக்கு முகமாகவிருந்து பஞ்சாக்ஷர மந்திரத்தை உச்ச ரித்துக்கொண்டு கோடைக்காலத்தில் பஞ்சாக்கினி மத்தி யிலும், மாரிக்காலத்தில் தண்ணீரின் மத்தியிலுமிருந்து தவம் புரியலானர். இவ்வண்ணம் தவம் இயற்றிவரும் காலையில் திடீரென்று அவர் ஸுஷும்ன நாடியின் வழியாய் அக்கினி கிளம்பிப் பிரம்மமந்திரத்தைப் பேதித்துக் கொண்டு மேல்நோக்கிச் சென்றது. அதனால் அவர் ரோமங்கள் எரிந்து சாம்பலாயின. இந்நிலையிலும் அவர் சற்றும் மனத்தளர்ச்சி யடையாமல் தன் கருமமே கண்ணு யிருந்தார். அப்போது தேவர்கள் அனைவரும் முனி சிரேஷ்டரின் தவத்தைக் கண்டு ஆச்சரியமெய்தி யாது நேருமோவென அஞ்சினர். பின்னர், அதனைத் தங்கள் தலைவனாகிய தேவேந்திரனுக்குத் தெரிவித்தனர். அமரர் களின் வார்த்தையைக் கேட்ட இந்திரன் கலக்கமடைந்து,

முனிவரின் தவத்தைக் கலைக்கும்பொருட்டு அரம்பை மாத ருள் சிறந்த திலோத்தமையை ஏவினன்.

தேவர்கோனின் ஏவலைப்பெற்ற திலோத்தமை, தன் வீணையைக் கையில் எடுத்துக்கொண்டு விண்ணுலகை விட்டு மண்ணுலகில் விசுவாமித்திர முனிவர் தவம்புரியும் வேத வனத்தையடைந்து வீணையைக் கொண்டு இசைமீட்டிக் காதுக்கினிமையான பாடல்களைப் பாடலாயினள், இவ் வண்ணம் திலோத்தமை வெகுகாலமாக வீணுகானம் செய் தும் பயன்பெறவில்லை. பின்னர், முனிவர், தன் தவத்தை ஒருவாறு நிறுத்தி, கண் விழித்துத் திலோத்தமையை நோக்கினர். உடனே திலோத்தமை, தன் அழகிய உருவ மொழிந்து மானுயினள். மறுபடியும் முனிவர் ஓரிடத்தில் அமர்ந்து தவம் புரியலானர். இவ்வாறு தவம் செய்யுங் காலையில் மானுகிய திலோத்தமை மீண்டும் தவத்தைக் கலைக்கும்வண்ணம் முனிவருக்குப் பற்பல தீமைகள் விளை விக்கலாயினள். இவற்றினைக் கண்ட மாதவசிரேஷ்டர் மீண்டும் கண்விழித்து, திலோத்தமையைச் சபித்துவிட்டுத் தன் தவம் சித்திபெறும்வண்ணம் வேதநதியில் தீர்த்த மாடி, வேதவனேசனைத் தரிசித்துத் தீர்த்தமகிமையினல் சப்தரிஷிகளுள் ஒருவரானர்.

உருவமும், வனப்பும் அழியப்பெற்ற திலோத்தமை ஈசனருளால் வேதநதியில் ஸ்நானஞ்செய்து, ஆதித்திய னுடைய ரதத்திலேறி வானடைந்தனள். இவ்வண்ணம் மாதவர்களும், மன்னர்களும், வருணன் முதல் யக்ஞவல்கி யர் முதலானவர்களும் வேதவனத்தில் ஆத்மஞானமடைந் திருக்கிறார்கள். திரிசங்கு தன் சண்டாள ரூபம் நீங்கி,

திவ்ய தேஜசுடன் சுவர்க்கம் பெற்றான். சண்முகக்கடவுள் வேதவனத்தில் செய்த அரிய தவத்தின் பயனால் தாருகாசுரனைச் சம்ஹாரம் செய்தார். இன்னும் மைத்ரேயி, கார்கி முதலானோர்களும் முக்தியடைந்திருக்கின்றனர்.

## வேதாரண்ய சேதுபந்தன காலம்

இவ்வாறு விசுவாமித்திரர் வேதவனத்தில் முக்தி பெற்ற வரலாற்றைக் கேட்ட மாந்தாதா பெருமகிழ்ச்சியடைந்து, பிருமபுத்திரரை சிரம் வணங்கி சுவாமி! "அடியேன் தங்கள் தரிசனத்தின் பயனால் பற்பல அரிய விஷயங்களை ஓதியுணர்ந்தேன். ஆயினும் வேதவனத்தில் ஸ்ரீராமனால் எப்பொழுது சேதுபந்தனம் செய்யப்பட்டதென்றும், இராமேசுவரத்தில் எப்பொழுது சேதுபந்தனம் செய்யப்பட்டதென்றும் என் மனம் சந்தேகம் கொண்டிருப்பதனால் தேவரீர் தயைபுரிந்து உரைத்தருளல்வேண்டும்" என்று வினவ, நாரதர் இயம்பலானார்.

ஓ வீரகண்டை யணிந்த வேந்தனே! கேள், கிருதம், திரேதை, துவாபரம், கலியுகம் இந்நான்கும் சேர்ந்தது ஒரு சதுரயுகம். சதுரயுகம் ஆயிரம் கொண்டது பிரம்ம தேவனுக்கு ஒரு பகலாகும், அவ்வளவு கொண்டது ஒரு இரவு. இரண்டாயிரம் சதுரயுகங்கள் கொண்டது ஒரு நாள், அவவாற முப்பது கொண்டது ஒரு மாதம், பன்னிரண்டு கொண்டது ஒரு வருடம், ஐம்பது வருடங்கள் கொண்டது ஒரு பதார்த்தம், இரண்டு பதார்த்தங்கள் ஒரு பிரம்ம ஆயுசு. ஒரு பிரம்ம ஆயுசு விஷ்ணுவுக்கு ஒரு பகல். இவ்வாறு நூறு வருடங்கள் விஷ்ணுவின் காலம். இதைப்போல் நூறு கொண்டது ருத்திரருக்கு ஒரு ஜீவியம்.

இப்படிப்பட்ட காலநியமனங்களுள் ஜீவகோடிகள் உய்யும்பொருட்டு மகாவிஷ்ணு தசாவதாரம் எடுத்தார். அவற்றுள் இராமவதாரத்தில் தேவீபட்டணத்தில் சேது பந்தனஞ் செய்யப்பட்டது. இக்காலத்திற்கு முன்னிருந்த மகாவிஷ்ணுவினால் இராமவதாரத்தில் வேதவனத்தில் சேதுபந்தனஞ் செய்யப்பட்டது. ஆகையால் இதற்கு ஆதி சேது என்று பெயர். ஆதியில் தோன்றிய இராமபிரானு டைய பிரம்மஹத்தி ஈசனருளால் வேதாரண்யத்தில் நிவர்த் தியானதென்று முன்னரே கூறியிருக்கின்றேன். அதன் பின்னர் அவதரித்த இராமபிரானுடைய வீரஹத்தி விக் னேசுவரரால் ஒழிந்துவிட்டது. தேவீ பட்டணத்தில் செய்யும் நூறு ஸ்நானங்கள் வேதவனத்தில் செய்யும் ஒரு ஸ்நானத்திற்கு சமானமாகும். இவ்விஷயத்தில் வேத வனத்தில் பிரம்மஹத்திகூட பறந்தோடுமென்பதில் ஐய மில்லை. குருக்ஷேத்திரத்தில் மும்முறை செய்யும் யாத்தி ரையும், வேதவனத்தைக் குறித்துச் செய்யும் ஒரு யாத்தி ரையும் சமமான பலனையளிக்கும்.

சேதுயாத்திரையைத் தொடங்குபவர்கள் முன்னு னில் விஷ்ணு யாத்திரையைச் செய்யவேண்டியது அவசி யம். விஷ்ணு யாத்திரையைச் செய்துவிட்டு சேதுயாத்தி ரையைச் செய்தவன் மூன்று பிரம்மயாத்திரையையும் இரண்டு மானசயாத்திரையையும் நூறு அக்கினிஷ்டோ மத்தையும் செய்த பலனைப் பெறுவான். முதல் நாள் விஷ்ணு யாத்திரையைச் செய்துவிட்டு இரவில் பூமியின் மேல் படுத்துறங்கி, மறுநாள் உதயத்தில் நித்தியகடமை களை முடித்துக்கொண்டு வேதவனேசன் சன்னதிக்குச் சென்று, ஓ ஜகத்ரக்ஷகா, குலத்தை முன்னேற்றமடையச்

செய்யும் சேதுயாத்திரையைச் செய்வதாகத் தெரிவித்து விட்டு மணிகர்ணிகையில் ஸ்நானஞ்செய்து மணிகர்ணிகேசனைத் தொழுது, விசுவநாதனை வணங்கி, துண்டிவிநாயகரை மோதகம் முதலியவற்றால் அர்ச்சித்து, பைரவரை நமஸ்கரித்து, அகஸ்தியகூபத்தில் புரோக்ஷணஞ்செய்து, சத்தியநதிக்குச் சென்று விதிப்படி ஸ்நான தானங்கள் செய்து, தீரத்திலிருக்கும் வாம்பரேசனையும் காளஹஸ்தீசுவரனையும் கும்பீசுவரனையும் ஹாலாஸ்ய நாயகனையும் வல்பீகேசனையும் கேதாரேசனையும் பூஜித்துவிட்டு அக்கினி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து கரையருகேயுள்ள பரான்னேசனையும் பரத்திரவியேசனையும் பிரதிக்கிரேசனையும் தோத்தரித்து, ருத்திரகோடியை யடைந்து, முறைப்படி தர்ப்பணம் முடிந்தபின்னர், இரண்யசிரார்த்தம், பிண்டதானம், தர்ப்பணம் முதலியன செய்து அந்தணர்களுக்கு வெள்ளியைத் தானம் செய்யவேண்டும். பெண்கள் பஞ்சாக்ஷரமந்திரத்தைச் சொல்லிக்கொண்டே ஸ்நானமியற்றி சித்தாச்சிரமத்தையணுகி, சித்தர்களை நமஸ்கரித்து, சேதுவை வணங்கி, கைலாயம் சென்று ஏகாதச ருத்திர தீர்த்தத்திலும், சுதாபுஷ்கரணியிலும், குகை தீர்த்தத்திலும் தீர்த்தமாடி, அமிர்தலிங்கத்தையும் மேற்பாகத்திலிருக்கின்ற மோக்ஷேசுவரரையும், ஸ்கந்தேசுவரரையும், விக்கினேசுவரரையும் வணங்கி, உமாசரசை யடைந்து ஸ்நானமியற்றி உமாதேவியை யுத்தேசித்துக் கன்னிகையை தானம்கொடுத்து, அகஸ்தியாச்சிரமம் அடைந்து துவாதசாதித்திய தீர்த்தத்தில் தீர்த்தமாடி, தண்டுவதானம் செய்து, அக்கினி புஷ்கரணியிலும் அத்திரி தீர்த்தத்திலும் தீர்த்தமாடி, அகஸ்தீசுவரரையும் லோபாமுத்திரேசுவரரையும் கண்ணுவேசுவரரையும் அத்திரிதேவரையும் வணங்கி, யமதீர்த்

தம், தும்புருதீர்த்தம், நாரததீர்த்தங்களில் தீர்த்தமாடி, பின்னர் மணிகர்ணிகையில் ஸ்நானமியற்றி, இராமநாதனைத் தரிசித்து, வேதவனேசனுக்குத் தூபதீப நைவேத்தியங்களளித்து வணங்கி வலம்வந்து துதித்துப், பாதரக்ஷை, குடை, தாம்பூலம் முதலியனவின்றி யாத்திரையை முடித்து, உபவாசத்துடன் அன்றிரவைக் கழித்து, மறுநாள் உதயம் நித்தியானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அந்தணர்களிடத்தில் சந்தர்ப்பணம்பெற்று, தக்ஷிணை, தாம்பூலமளித்த பின்னர், மௌனவிரதம் அனுஷ்டிக்கவேண்டியது.

இவ்விதமாக வேதவனத்திலுள்ள ஆடவரும், மாதரும் மாதத்திற் கொருமுறையாகிலும், வருடத்திற் கொருமுறையாகிலும் கட்டாயம் செய்யவேண்டும். அவ்விதம் செய்யாமல் வேதவனத்தைவிட்டு வேறிடத்திற்குப் போகுபவர்களைப் பித்ருக்கள் சபிக்கின்றார்கள். இவ்வண்ணம் செய்தால் காசியாத்திரையைக் காட்டிலும் அதிக பலனுண்டு. பஞ்சமகா பாதகங்களும் பறந்தோடுமென்பதில் ஐயமில்லை.

## தக்ஷிணமானஸ யாத்திரை.

இவ்வண்ணம் நாரதர் சேதுபந்தனத்தை உரைத்த பின்னர் மாந்தாதாவை நோக்கி, ஓ வேந்தர் வேந்தே! நான் இப்பொழுது தக்ஷிணமானஸ யாத்திரையை எனக்குத் தெரிந்தவரைக்கும் சொல்லுகின்றேன் கேள்.

முதல் நாள் ஒரு வேளை ஆகாரம் உட்கொண்டு மறுநாள் நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வேதவனேசன் சன்னதியை யடைந்து, கைகுவித்து

வணங்கி, ஓ பக்தரக்ஷகா, சகல பாபங்களையும் ஒழிக்கும் பொருட்டுத் தக்ஷணமானஸ யாத்திரையைச் செய்வதாக உத்தரவுபெற்று, விசுவாமித்திர தீர்த்தத்திற்குச் சென்று ஸ்நானம்செய்து, சமீ விருக்ஷத்தை வணங்கிப் பிராமண சந்தர்ப்பணம் செய்து அவர்களிடத்தில் அனுமதிபெற்று நிருதி தீர்த்தத்தில் தீர்த்த முடித்து மாஷதானம்செய்து சப்தசாகர தீர்த்தத்தில் தீர்த்தமாடி, ரத்தினதானஞ் செய்து மனுதீர்த்தத்தில் தீர்த்தமாடி, புஸ்தகதானம் செய்து, சம்ஞாதீர்த்தத்தில் தீர்த்தமாடி அர்க்கியதானஞ் செய்து, சூரியபுஷ்கரணியில் ஸ்நானஞ்செய்து கோதான மளித்து, பாஸ்கரேசனை வணங்கி தீபதானம் கொடுத்து பாயச நிவேதனஞ்செய்து, சோமபுஷ்கரணியில் ஸ்நானஞ் செய்து வஸ்திரதானம் புரிந்து சோமேசனை வணங்கி நீல தீர்த்தம், அஞ்ஞானமோசனம், கலிநாசனம், விசுவதேவ தீர்த்தம் முதலியனவற்றுள் தீர்த்தமாடி விசுவதேவர்க ளால் பூஜிக்கப்பட்ட லிங்கத்தைத் தரிசித்துச் சக்திக்குத் தகுந்தபடி தானஞ்செய்து, சப்தமரு தீர்த்தத்தில் தீர்த்த மாடி தானியதானஞ் செய்து, மருதீசனைப் பணிந்து சன் னதியில் தீபமேற்றி ஜாம்பவானுடைய தீர்த்தத்தில் தீர்த்த மாடி தர்ப்பணஞ் செய்து க்ஷேத்திரபிண்டம் கொடுத்து ஆஜ்ஜியதானஞ் செய்து மூன்று அர்க்கியங்கொடுத்து சுவேஷசன தீர்த்தத்தில் தீர்த்தமாடி தாம்பூலதான மளித்து வருணதீர்த்தத்தில் தீர்த்தமாடி வருணேசனை வணங்கி சன்னதியில் சுவர்ணதானம் கொடுத்து பரத்துவாஜ தீர்த் தத்தில் தீர்த்த முடித்து கோதூமதானஞ் செய்து பஞ்சா க்ஷரத்தை ஜபித்து வீரசக்தி விநாயகரைத் தரிசித்து சன் னதியில் திருவிளக்கேற்றி மோதகம், தேங்காய், பொரி, கரும்பு முதலியனவற்றை நைவேத்யம் செய்து வணங்கி மணிகர்ணிகையில் ஸ்நானஞ்செய்து சமீ விருக்ஷமூலத்தில் பஞ்சாக்ஷர தியானஞ்செய்து, வேதவனேசனையும், வடவ கேசனையும் நிபதூப நைவேத்யங்க ளளித்து உபவாசமிரு ந்து மறுநாள் காலைக்கடன்களை முடித்துப் பிராம்மண சந்

தர்ப்பணஞ் செய்து அவர்கள் அனுமதியின்படி மௌனத்துடன் பூஜைகள் செய்யவேண்டியது. இவ்விதம் செய்தவனுக்குக் கைலை சித்திக்குமென்பதில் சந்தேகமில்லை. சகல பாபங்களும் நசிக்கும். கருதிய காரியங்கள் கைகூடும். சாதாரண நாட்களிலன்றி பானு வாரத்தில் செய்தால் பன் மடங்கும், திங்கட்கிழமைகளில் செய்தால் நூறு மடங்கும் பலன் தரும்.

---


# சரீர மனோ ரக்ஷிணி

அல்லது

# துளசியின் இரகசியம்.

(சர்வரோக சஞ்ஜீவி.)

திருமாலுக் குகந்த துளசியின் பெருமையை நன்கு விளக்கும் 64 எளிய சுதந்திர வைத்திய விதிகளடங்கிய இந்நன்னூல் பாபா சர்யூதாஸ்ஜி மஹந்து என்னும் மஹானால் பல்லாண்டுகளாக அரிய முயற்சிசெய்து கண்டுபிடிக்கப்பட்டது. ஆதியில் ஹிந்திபாஷையில் எழுதப்பட்டு வட இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான ஜனங்களால் படிக்கப்பட்டு மிகவும் குணத்துடன் விளங்கிய இவ்வரிய நூலை தமிழில் எழுதினால் பெரும்பாலும் நாளுக்கு நாள் வியாதியினால் பீடிக்கப்பட்டு பணத்தை வீணாகச் செலவுசெய்து வருந்தும் மக்களுக்கு மிகவும் உபகாரமா யிருக்குமென்னும் அன்பர்கள் பலரின் விருப்பத்தின்படி குறைந்த விலையில் எளிய நடையில் ஸ்ரீமான் செ. வே. பாலகிருஷ்ணம் அவர்களால் தமிழில் மொழிபெயர்த் தெழுதப்பட்டது. இன்னும் சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன. இந்து நேசர்கள் அனைவரும் இந்நூலை படித்துணர்ந்து அதனை கருமத்திற் காட்டி நோயற்ற வாழ்வுட னிருப்பார்களாக.

விலை அணா 2. 2½ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கிடைக்குமிடம்:—செ. வே. பாலகிருஷ்ணம்,

1, சைபுல் முலக் தெரு,

கோமளீஸ்வரன்பேட்டை, சென்னை.

TIRUVAIMOLI

Translated into English Prose from the original Tamil Text of

SATHAKOPA

alias

NAMMALWAR

The Greatest Vaishnava Dravidian saint of the Southern India.

BY

N. KURATTALWAR IYENGAR

Telugu Pandit, St. Joseph's College, Trichinopoly

Calico Bind into one Volume Price Rs. 3.

This book was published in 10 parts. Each part comprises 110 stanzas in simple style appealing to the hearts of the readers. The book clearly treats of the Visishtadvaita Philosophy of the Vedantic doctrine (Sacred Hymns) of the upanishads in the devotional form.

It is frequently prescribed as a text book in the colleges. It is chanted in every Vaishnavic temple and house in South India almost every day.

It can be read by the both sex, young and old, irrespective of caste and creed.

THE HINDU, Madras, writes:—

This is a very laudable attempt to present the beautiful verses of Nammalwar in an English garb. The translation has been done with great care and

though the exquisite phrasing and emotional expression of Nammalwar could not by their very nature be indicated in an English translation, the author has taken care to preserve the ideas without modifying them.

We welcome this book as placing within the reach of Non-Tamilians the contents of Nammalwar's Thousand Songs which has been rightly given a place of equality with the Vedas by the Vaishnavites, for it combines the exposition of a consistent philosophy with an immaculate expression of emotional experiences.

THE MADRAS MAIL, writes :—

The "Tiruvoimoli of Sathakopa or Nammalwar is a noble effort, to borrow the words of another poet; to "assert eternal Providence and justify the ways of God to men." The beautiful verses of the Vaishnava singer and saint are sung all over the Tamil country and an English translation of the reach of them cannot but bring them within a wider public. Mr. Kurattalvar Iyengar has faithfully reproduced in his translation grace and splendour of the thougts and imagery to its great original in Tamil.

Anecdotes from

BHAGAVATA PURANAM

PRICE AS. 2

THE LIVES OF

TAMIL VAISHNAVA SAINTS

Price As. 2